R4837

# A GODLY YOUNG KING

# தெய்வ பக்தியுள்ள இளமையான ராஜா

2 நாளாகமம் 34: 1-13

“வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை.” பிரசங்கி 12:1

கடந்த பாடத்தில் நாம் பார்த்த மனாசே ராஜாவுக்கு ஆமோன் என்ற கெட்ட குமாரன் இருந்தான். அவன் இரண்டு வருடம் அரசாண்டான். அவன் தன் நீதிமன்ற உறுப்பினர்களாலே அவனது அரண்மனையிலேயே கொல்லப்பட்டான். அவனது மகன் யோசியா, தனது எட்டு வயதிலே ராஜாவானான். இன்றைய பாடம் அவனைப் பற்றியதாகும். அவன் தனக்கு பதினாறு வயதாகும் போது தேவனை தேடி அவருக்கு ஊழியம் செய்ய விரும்பினான். அவன் இருபது வயதானபோது மத நம்பிக்கை இன்னும் அதிகமாகி, அவன் ராஜாவாக சீர்திருத்த வேலைகளை தைரியமாக செய்ய ஆரம்பித்தான். சிலைகளையும் அதன் கோவில்களையும் விக்கிரக தோப்புக்களையும் உடைத்து நொறுக்கிப் போட்டான். இன்னோம் பள்ளத்தாக்கு, முன்னரே பரிந்துரைக்கப்பட்டது போல, அழிக்கப்பட்டு எருசலேமின் குப்பைக்கிடங்காக மாற்றப்பட்டது.

கர்த்தரின் ஆலயம் பழுது பார்க்கப்பட்டு, விக்கிரக தீட்டுகள் அனைத்தும் சுத்திகரிக்கப்பட்டு, சர்வ வல்லவரின் ஆராதனை ஸ்தலமாக சீர்படுத்தப்பட்டது. இது மாத்திரமல்ல, ராஜா தனது ராஜ்யத்துக்கு வடக்கேயிருந்த இரண்டு கோத்திரத்தாரின் எல்லைகளிலும் இருந்த பலிபீடங்களையும் விக்கிரக தோப்புக்களையும் நொறுக்கிப் போட்டான்.

## காட்டு ஓட்ஸ் (Wild Oats) முதலாவது விதைக்கப்பட வேண்டும் என்று கருதுவது தவறு

“வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை” என்கிற நமது தலைப்பு வசனத்தில் எப்படிப்பட்ட வலிமை இருக்கிறது! சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் நீதியை புரிந்து கொண்டு அதற்கு ஊழியக்காரர்கள் ஆவதற்கு முன்னரே அவர்கள் “காட்டு ஓட்ஸை” விதைக்கக்கூடிய அனுபவம் பெற வேண்டும் என்று விரும்புவது எவ்வளவு பெரிய தவறாக இருக்கிறது! இந்த கருத்து ஆண், பெண் இளைஞர்களிடம் பிரதிபலிக்கிறது. அவர்கள் தங்கள் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை நாடுவது அரிதாகவே இருக்கிறது. பரிசுத்தமுள்ள தாய்மார்கள் தற்செயலாக, தங்கள் பிள்ளைகள் உலகத்தின் எந்த வழியில் நடக்கக்கூடாது என்பதை அறிமுகப்படுத்தி அவர்களது பாதங்களுக்கு கீழாக கண்ணிகளை வைக்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர்கள் தங்கள் மனோபாவத்தை இப்படிக் கூறி வெளிப்படுத்தினார்கள். “இந்த பிள்ளைகள் மேல் சிலுவையின் பாரத்தை நான் வைக்கக்கூடாது. புனிதத்துவத்தை எதிர்பார்க்கக்கூடாது. அவர்கள் தேவனுடைய அர்ப்பணம் பண்ணப்பட்ட பரிசுத்தவான்களாக ஆகும் போது, அவர்கள் சோதனைகளையும், “இடுக்கமான பாதை” மற்றும் இன்னும் அநேக காரியங்களையும் அறிந்து கொள்ளுவார்கள்.”

ஐயோ! இப்படிப்பட்ட கிறிஸ்தவ தாய்மார்கள் நிலைமையை சரியானபடி புரிந்து கொள்ளவில்லை. தற்காலத்தில் “இடுக்கமான பாதையைத்” தவிர வேறு எதிலும் உண்மையான சந்தோஷம் இல்லை என்பதை அவர்கள் உணர தவறியிருக்கிறார்கள். சுயதிருப்தி, பெருமை, ஆசை, பாவம், சுயநலம் அடங்கிய “விசாலமான பாதை” தூரத்திலிருந்து பார்க்கும் போது, அது கானல் நீர், அதை அடைய முடியாது, அது ஒரு மாயை. சுயநலம், பெருமை முதலானவைகளின் விசாலமான பாதையில் செல்லக்கூடியவர்கள் தங்களால் முடிந்தவரை சந்தோஷத்தை தேடுகிறார்கள். அந்த பாதையில் செல்லக்கூடிய இலட்சக்கணக்கானவர்களில் எவ்வளவு பேர் சந்தோஷத்தை அடைந்திருந்திருக்கிறார்கள்? அவர்கள் வெறும் சந்தோஷத்தை தேடுகிறவர்களாக இருக்கிறவர்களேயொழிய சந்தோஷத்தை அடைந்தவர்களாக இல்லை. உலகத்திலே உண்மையான சந்தோஷம், நிஜமான சந்தோஷம் சுயபலியாகிய இடுக்கமான பாதையில், மாபெரும் போதகரின் அடிச்சுவட்டில், சிலுவையை எடுத்துக்கொண்டு அவரை பின்பற்றுவதில், அவர் ஜீவனை கொடுத்தது போல நாமும் ஜீவனைக் கொடுப்பதில் “அவரோடு பாடுபட்டால், அவரோடு ஆளுகை செய்வோம்” என்பதில் “அவராடு கூட மரித்தால், அவருடனே கூட பிழைத்தும் இருப்போம்” என்பதில் இருக்கிறது.

விசாலமான பாதையில் செல்கிறவர்களில் சிலர் மட்டுமே இடுக்கமான பாதைக்கு வருகிறார்கள். விசாலமான பாதையே சந்தோஷமும் களிப்புமான ஒரே பாதையாக இருக்கிறது என்கிற தவறான புரிந்துகொள்ளுதலை பெற்றோர்களும், நண்பர்களும், கிறிஸ்தவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தலைகீழாக காணும் பொழுதுதான் இடுக்கமான பாதைதான் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய விரும்பத்தக்க பாதை என்பதை நினைக்கிறார்கள்.

## ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் இருக்கக்கூடிய ஒரு குறிப்பிட்ட எளிமை மற்றும் நேர்மை

விசாலமான பாதையில் நடந்த பிறகு, இடுக்கமான பாதையை காண்கிறவர்கள் கூறுகிறதாவது: “நான் ஏன் சத்தியம், சந்தோஷம், சமாதானம் மற்றும் மகிழ்ச்சியின் பாதையை முதலில் காணவில்லை!”

சீரழிந்த நிலையில் நாம் அனைவரும் பிறந்திருந்தாலும் ஒரு குறிப்பிட்ட எளிமையும் நேர்மையும் ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் தோன்றுகிறது. இந்த கொள்கையைத்தான் ஒவ்வொரு போதகரும் உதவிக்காரரும் பொதுவாக பயன்படுத்த வேண்டும். ஒரு குழந்தை சரியான வழியில் வழிநடத்தப்பட்டால், அந்த குழந்தை சீக்கிரத்திலே தனது சிருஷ்டிகருடன் உறவையும் நல்இணக்கத்தையும் அடையும். ஒரு ஆசான் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. சில சமயங்களில் தேவ கிருபையினால் பரத்திலிருந்த செய்தியானது இருதயத்தை அடைந்து அதிக எதிர்ப்பின்றி இழுக்கப்படுகிறதாக தெரிகிறது. வாழ்க்கையின் புனிதத்தன்மை உணரப்படுகிறது. பரத்திலிருந்து ஞானம் தேவைப்படுவது உணரப்படுகிறது. ஒரு வேளை ஊழியனிடமிருந்து, ஒரு வேளை பெற்றோரின் வழிமுறைகள் மூலம், ஒரு வேளை ஒரு கைப்பிரதி அல்லது ஒரு புத்தகம் மூலம் ஆகும். இளைய மனதிற்கு ஞானத்தின் வழி காண்பிக்கப்படுகிறது. கர்த்தரிடத்திற்கும், இடுக்கமான பாதைக்கும் வழி காண்பிக்கப்படுகிறது.

தெய்வீக கிருபையின் கீழாக, சித்தமே நமது விதிக்கு உண்மையான இயக்குனராக இருக்கிறது என்பதை நாம் நினைவில்

கொள்ள வேண்டும். சித்தமானது சரியாக வழிநடத்தப்பட்டு, நிலைநிறுத்தப்படுவது தான் முக்கியம். இன்றைக்கு அநேகர் தேவனிடமிருந்து விலகி, பாவம் மற்றும் சுயநலம் என்கிற விசாலமான பாதையில் இருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கையின் மார்க்கம் மற்றும் நிலைமை அனுதாபம் அற்ற அநேக நல்ல குணங்களை உடையவர்களாக இருக்கிறார்கள். வழிநடத்த, வழி காட்ட சித்தம் இல்லாமல் அவன் கீழே செல்கிறான். சிலர் இதே போல இடுக்கான பாதையில் இருப்பவர்கள் பரம்பரையான மாம்சீக, மனதளவில் மற்றும் ஒழுக்கத்தின கறைகளினால் விசாலமான பாதையை நோக்கி இழுக்கப்படுகிறார்கள். ஆனால் கர்த்தரின் இடுக்கமான பாதையில் வைக்கப்பட்டிருப்பவர்கள் மாம்சத்தின் சுயசித்தத்தினால் அல்ல, புதுப்பிக்கப்பட்ட சித்தத்தின் வல்லமையினால் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இளமையில் நமது சித்தம் சரியாக இயக்கப்பட்டு, பொருத்தப்படுதல் எவ்வளவு முக்கியம்! எவ்வளவு ஆசீர்வாதத்தை தற்கால வாழ்க்கையில் அனுபவிக்கிறோம்! எதிர்கால வாழ்க்கைக்கு தேவையான ஆயத்தங்கள் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது!

யோசியா ராஜாவின் இன்றைய பாடத்தை ஒவ்வொரு இளைஞனும் உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. முதலாவதாக, இளமையிலேயே தீங்கு நாட்களும் தீய அனுபவங்களும் வருவதற்கு முன்னரே ஒருவர் தீமையை கற்றுக்கொண்டு, அது பிற்காலத்தில் வாழ்க்கையையே அழிப்பதற்கு முன்னரும் இருதயமானது கர்த்தருக்கு கொடுக்கப்பட வேண்டும். பிறகு யோசியா ராஜாவைப் போல, நீதிக்கு ஊழியம் பண்ண காலம் நமக்கு சந்தர்ப்பத்தை கொண்டு வரும் போது நீதியை சிநேகிக்கவும், தீமையை எதிர்க்கவும் நாம் முழு மனதுடன் இருப்போமாக. எல்லா காரியங்களிலும் தேவனை ஸ்தோத்தரிக்கவும், தேவனே எல்லாவற்றிலும் நமக்கு முதலாவதாக இருக்கவும் வேண்டும்.